# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்)

**இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமையைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*மாத்தறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ புத்திக பதிரண அவர்களால் 2016, மே மாதம் 04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2016, பெப்புருவரி மாதம் 26 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***105 ஆம் சட்டமூலம்*** ]


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : 10.00**

## இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்)

## இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமையைக் கூட்டிணைப்ப தற்கானதொரு சட்டம்

முன்னுரை.

''ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை'' என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சங்கமொன்று அச்சங்கத்துடன் தொடர்புடைய எல்லாக் கருமங்களையும் பயனுறும்வகையில் நிறைவேற்றி கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

சொல்லப்பட்ட சங்கம் எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்கும் கருமங்களுக்குமாகத் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் அது இதுவரை பயனுற நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும் அது பாராளுமன்றச் சட்டத்தால் கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்களின் நன்மைக்கானதாவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1**. இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமைச் சங்கத்தைக் கூட்டிணைத்தல்.

**2**. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் ''சங்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை என்னும் பெயர் மகுடத்தின் கீழ் இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும், அவர்கள் விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

2-PL 009918 - 300 (2016/02)

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) எமது கர்த்தாராகிய கிறிஸ்துவின் முழு நற்செய்தியையும் பரிசுத்த மறைநூலையும் மத்தேயு எழுதிய நற்செய்தியின் அதிகாரம் 28 வாசகம் 18-20 மற்றும் மாற்று எழுதிய நற்செய்தியின் 16 ஆம் அதிகாரம் வாசகம் 16-20 ஆகிய வாசகங்களில் அவரால் ஆணையிடப்பட்டவாறு போதித்தலும் பிரகடனப்படுத்துலும் ;

(ஆ) பரிசுத்த மறைநூலில் எழுதப்பட்டவாறு எமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் முழு நற்செய்தியையும் விசுவாசித்து ஏற்றுக் கொள்பவர்களையும் எமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக உரிமைகோருபவர்களையும் சங்கத்தின் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளுதல் ;

(இ) பரிசுத்த மறைநூலில் கர்த்தரின் வார்த்தையில் கட்டளையிடப்பட்டவாறு (ஆவியிலும் உண்மையிலும்) ஒன்றுகூடும் விசுவாசிகளின் கூட்டமொன்றில் எமது கர்த்தாராகிய இயேசு கிறிஸ்துவை ஆராதிப்பதற்கு சங்கத்தின் ;

(ஈ) பரிசுத்த மறைநூலில் கர்த்தரின் வார்த்தையில் கட்டளையிடப்பட்டவாறு (ஆவியிலும் உண்மையிலும்) ஒன்றுகூடும் விசுவாசிகளின் கட்டமொன்றாக எமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஆராதிப்பதற்கு சங்கத்தின் உறுப்பினர்களுக்கு வசதியளித்தல் ;

(உ) பாவத்திலும் பிணியிலும் துயரத்திலுமிருந்தான விடுதலை உட்பட முழுபூரண விடுதலைக்கு உரிமை கோர சங்கத்தின் உறுப்பினர்களுக்கு வசதியளித்தல் ; அதன்மூலம் பரிசுத்த மறைநூலில் காணப்பட்டவாறு எமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வாக்குறுதிகள் அனைத்திற்கும் உரிமைகோருவதன் மூலம் ஆன்மீக வளர்ச்சிபெறுவதற்கு அத்தகைய உறுப்பினர்களுக்கு உதவிபுரிதல் ;

(ஊ) பவுல் எழுதிய பரிசுத்த மறைநூலில் அப்போஸ்தலர் நடவடிக்கையில் ஆணையும் கட்டளையும் இடப்பட்ட வாறு வேதாகாமம் சார்ந்த ஒழுக்கத்தின் மூலமும் கிறிஸ்தவ சபையை நிலைநாட்டுவதன்மூலமும் விசுவாசிப்பவர்களுக்கும் கிறிஸ்தவ மறைபரப்புப் பணியை பரப்புபவர்களுக்கும் ஞாயிறு பாடசாலை களையும் வேதாகமக் கல்லூரிகளையும் ஞானொடுக்கம் கருத்தரங்கு நிலையங்களையும் தாபித்தல் ;

(எ) சபைக்குழுக்களையும் இத்தால் இச்சங்கத்திடமிருந்து அத்தகைய உரிமைகளைப் பெற விரும்பும் சபைக் கூட்டத்தின் வேறு ஊழியர்களையும் திருநிலைப்படுத்து வதற்கும் சான்றளிப்பதற்குமான உரிமையை நிறுவுதல்;

(ஏ) இலங்கையில் அல்லது வெளிநாட்டில் இதனையொத்த மறையில் குறிக்கோள்களையும் கிறிஸ்தவ கூட்டங்க ளுடன் இணைதல் ;

(ஐ) கிறிஸ்தம் பற்றிய புத்தங்களையும் ஆய்வுக் கட்டுரை களையும் நூல்களையும் சஞ்சிகைகளையும் ஏடுகளையும் செய்தித்தாள்களையும் செய்திமடல்களையும் அச்சிடு தல் ;

(ஒ) எமது கர்த்தாராகிய இயேசு கிறிஸ்துவின் போதனை கள் பற்றி பகிரங்க நற்செய்திக் கூட்டங்களையும் உரையாடல்களையும் கருத்தரங்குகளையும் சம்மேளனங் களையும் நடத்துதல் ;

(ஓ) பகற்பொழுது பராமரிப்பு நிலையங்கள் பாலர் பாடசாலைகள், தொழிற்பயிற்சி நிறுவனங்கள், மருத்துவ நிலையங்கள் என்பவற்றையும், இன, மத வேறுபாடுகளின்றி எல்லா மக்களினதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு சமுதாய அபிவிருத்தியின் இயல்பினதான அத்தகைய வேறு கருத்திட்டங்களையும் தாபித்தல் ; மற்றும்

(ஔ) மேற்படி குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையும் எய்துவதற்கு இடைநேர்விளைவானவையும் அல்லது அவற்றிற்கு உகந்தவையுமான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் விடயங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அல்லது உசிதமானவாறான எத்தன்மையவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவத்துள் வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்துதல், முடிவுறுத்தல் என்பவற்றுக்கும் பிணைப் பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பில்லாமல் பணம் கடன்பெறுவதற்கும் சேகரிப்பதற்கும் அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாட்களையும் வேலையிலீடுபடுத்துதல், வேலைக்கமர்த்தல், வேலையிருந்து நீக்கல் என்பனவற்றுக்குமான தத்துவம் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய, அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டு அவற்றுக்கிணங்க, அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டு அவற்றுக்கிணங்கத் தெரிவுசெய்யப்படக்கூடியவாறான அத்தகைய உறுப்பினர்களைக் கொண்டமைந்த முகாமைக்குழுவொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைக்குழு, இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் பதவி வகிக்கின்றவர்களான சங்கத்தின் முகாமைக்குழுவாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6**. (1) ஏதேனும் பொதுக்கூட்டத்திலும் அத்துடன் அதில் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களுள் நான்கில் மூன்றுக்குக் குறையாத வாக்குகள் மூலமும் உறுப்பினர்களைச் சேர்த்தல், உறுப்பினர்கள் பதவி விலகல், ஓய்வுபெறுதல், அல்லது அவர்களை விலக்குதல், முகாமைக்குழுவின் பதவிதாங்குநர்களை தெரிவுசெய்தல் என்பவற்றிற்காகவும் அத்துடன் முகாமைக்குழுவினதும் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களினதும் முகவர்களினதும் சேவையாளர்களினதும்

கடமைகளை நிறைவேற்றுதல், அலுவல்களை நிறைவேற்றுதலில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறைகளுக்காகவும் அத்துடன் வேறுவகையில் பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்வதற்காகவும் அதன் குறிக்கோள் களை எய்தப்பெறுவதற்காகவும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிரா விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டவிடத்து, அவை ஆக்கப்பட்ட அதேபோன்ற ஒரு கூட்டத்தில் அதேமுறையில் மாற்றப்படலாம், திருத்தப்படலாம் அவற்றுடன் வேறு விதிகள் சேர்க்கப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்படலாம் என்றாற்போன்று அதேபோன்ற கூட்டமொன்றில் அதேமுறையில் திருத்தப் படலாம், மாற்றப்படலாம், அதற்குச் சேர்க்கப்படலாம் அல்லது நீக்கப்படலாம். ஆயின், அத்தகைய திருத்தம், மாற்றம், சேர்க்கை அல்லது நீக்கம் ஏதேனும் முகாமைக்குழுவின் அங்கீகாரத்தை முன்னதாகவே பெற்றிருத்தல் வேண்டும்.

(3) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலிருக்கின்றவையான கூட்டுத்தாபனத்தின் விதிகள், அவை இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக இல்லாத அளவுக்கு இப்பிரி வின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபன விதிகள் எனக் கருதப்படுதல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் அப்போதைய விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

*சங்கத்தின் அசையும் அசையா சொத்துக்கள்.*

**7**. இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமைச் சங்கத்தின் பெயரிலுள்ள அனைத்து அசையும் அசையா சொத்துக்களும் இதனகத்துப் பின்னர் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை ஐக்கிய கிறிஸ்த நட்புரிமை கூட்டுத்தாபனத்திற்குரித்தாக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம் அத்துடன் கையுதிர்க்க லாம் என்பது.

**8**. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, மரணசாசனக் கையளிப்பு மூலமாகவோ வேறுவகையாகவோ அதற்குரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் பெறவும் கொள்ளவும் வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமாதலும் ஆற்றுலுடையதாதலும் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க அல்லது கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் அதனைக் கையாள உள்ள முழுத் தத்துவங்களுடன் கூட்டுத்தாபனத்தினால் வைத்தி ருக்கப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாப னத்தின் இலச்சினை எவ்விதம் பொறிக்கப்பட வேண்டு மென்பது.

**9**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது முகாமைக் குழுவின் இரண்டு உறுப்பினர்கள் முன்னிலையில் அன்றி எத்தகையதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படலாகாது அவர்கள் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடல் வேண்டும். அவ்விதம் கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சிக்காரராகக் கையொப்பமிடுதலுக்குத் தனிவேறானதாதல் வேண்டும்.

குடியரசின் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.

**10**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக் கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்திற் குறிப்பிடப்பட்டவர்களும் அவர்கள்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**11**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்